# 2017

...குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில்

## உயிரி தகவலியல் துறை தேசிய கருத்தரங்கம்

■ காரைக்குடி

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை சார்பில் 'கட்டமைப்பு உயிரி தகவலியல் மற்றும் கணினி சார்பு மருந்து கண்டறிதலின் நவீன உத்திகள் மற்றும் வளர்ச்சிகள்' குறித்த தேசிய அளவிலான 4 நாள் கருத்தரங்க தொடக்க விழா நேற்று நடைபெற்றது.

துணைவேந்தர் சொ.சுப்பையா தலைமை வகித்தார். முன்னதாக, உயிரி தகவலியல் துறைத்தலைவர் ஜெ.ஜெயகாந்தன் வரவேற்றார்.

இதில் இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் உயிரி இயற்பியல் துறை பேராசிரியர் டி.பி.சிங் பேசியது: மாணவர்கள் தங்களது மூலக்கூறு பற்றிய ஆராய்ச்சியின் போது, ஆய்வக ஆதாரங்களுடன் கணினி சார்ந்த ஆதாரங்களையும் ஒப்பிட்டு, மதிப்பீடு செய்வது அவசியம்.



▲ கருத்தரங்கில் மலரை வெளியிடும் துணைவேந்தர் சொ.சுப்பையா உள்ளிட்டோர்.

இந்தியாவின் அறிவியல் வளர்ச்சிக்கு, தரமான அறிவியல் கண்டுபிடிப்புகளை தரவல்ல அறிவியல் புலம் சார்ந்த இளம் ஆராய்ச்சியாளர்கள் தேவை. இந்திய அறிவியல் வளர்ச்சி பிற வளர்ந்த நாடுகளுக்கு இணையாக வளர்ந்துள்ளது. உலகளவில் இந்தியா புரத தரவு வங்கியில் மூலக்கூறுகள் சேமிப்பதிலும், ஆய்விற்காக அதிகளவில் பயன்படுத்துவதிலும் இரண்டாமிடம் வகிக்கிறது. சுதந்திரமான மற்றும் நம்பகமான அறிவியல் ஆதாரங்களை வெளிப்படுத்தி, அதன்மூலம் பல சிறந்த அறிவியல் மாற்றங்களை உருவாக்குவதில் சிறந்த நாடாக இந்தியா திகழ்கிறது என்றார்.

கான்பூர் ஐஐடி பேராசிரியர் வீரேந்திர கே.யாதவ் பேசியது: மருந்து கண்டுபிடித்தலில் மூலக்கூறுகளுக்கு இடையேயான தொடர்பையும், உயிரி தகவலியலின் பயன்பாடு மற்றும் மனித உடலில் மருந்தின் செயல்பாட்டையும் கண்டறிய உயிரி தகவலியல் வல்லுநர்களுக்கும், வேதியியல் விஞ்ஞானிகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பு அவசியம் என்றார்.

கருத்தரங்க மலரை துணைவேந்தர் சொ.சுப்பையா வெளியிட, இந்திய மருத்துவ அறிவியல் கழக உயிரி இயற்பியல் துறை பேராசிரியர் டி.பி.சிங் பெற்றுக்கொண்டார்.

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் சஞ்சீவ்குமார் சிங் நன்றி கூறினார்.

DINAKARAN 16.02.2017

தினகரன்

6 - 02 - 2017

## எச்.ஐ.வி. போன்ற நோய்களுக்கு மருந்து கண்டறிவது அவசியம்

துணைவேந்தர் வேண்டுகோள்

# 'ஆன்டிபயாடிக்' எதிர் விளைவு
# 10 மில்லியன் பேர் பாதிக்கப்படுவர்

## அழகப்பா பல்கலையில் தேசிய கருத்தரங்கு தொடக்கம்



**THE HINDU 16.02.2017**

## Plan to set up Indian Bioinformatics and Drug Discovery Society: VC



தினகரன்

02 - 03 - 2017


# அழகப்பா பல்கலைக்கழகம் ஆராய்ச்சியில் 3வது இடம்



► காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த அறிவியல் வளாக பார்வையாளர் தினத்தை முன்னிட்டு அறிவியல் ஆய்வக கருவிகளை மாணவர்கள் பார்வையிட்டனர். உடன் துணைவேந்தர் சுப்பையா உள்பட பலர் உள்ளனர்.

## துணைவேந்தர் தகவல்

காரைக்குடி, மார்ச் 2: காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் ஆராய்ச்சியில் 3வது இடத்தில் உள்ளது என துணைவேந்தர் சுப்பையா தெரிவித்தார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் அறிவியல் தினத்தை முன்னிட்டு பார்வையாளர்கள் தினம் கொண்டாப்பட்டது. அறிவியல் வளாக இயக்குநர் கருத்தப்பாண்டியன் வரவேற்றார். நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து துணைவேந்தர் சுப்பையா பேசுகையில், " மாணவர்கள் ஏன், எதற்கு, எப்படி என்ற கேள்வி எழுப்ப கற்றுக்கொள்ள வேண்டும். அறிவியல் கண்டுபிடிப்புகள் என்பது ஒரே நாளில் நடைபெறுவதல்ல.

கல்வியால் மட்டுமே தாழ்ந்துகிடக்கின்ற சமுதாயத்தை உயர்த்த முடியும். கல்வி மட்டும் இல்லாமல் தன்னம்பிக்கையையும் ஆசிரியர்கள் கற்றுத்தர வேண்டும்.

மாணவர்களுக்கு அறிவியல் குறித்த விழிப்புணர்வு வர வேண்டும் என்பதற்காக பல்கலைக்கழகத்தில் உள்ள ஆய்வக கூடங்கள், புதிய ஆராய்ச்சிகள், வசதிகள் குறித்து தெரிந்து கொள்ள இதுபோன்ற பார்வையாளர்கள் தினம் கொண்டாப்படுகிறது. முதுநிலை ஆராய்ச்சிகுறித்து மாணவர்கள் தெரிந்து கொள்ள முடியும். நாட்டில் உள்ள 50 சிறந்த பல்கலைக்கழகங்களில் இப்பல்கலைக்கழகமும் ஒன்று. ஆராய்ச்சியில் 3வது இடத்தில் உள்ளது" என்றார். அறிவியல் துறை தலைவர் மணிசங்கர், ஆட்சிகுழு உறுப்பினர் ஜெயகாந்தன் உள்பட பலர் கலந்துகொண்டனர். புதுக்கோட்டை உள்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவர்கள் பார்வையிட்டனர்.

THE HINDU 16.5.2017

# NAAC awards 'A plus' grade to Alagappa University

## The accreditation will be valid for a period of seven year, says V-C

SPECIAL CORRESPONDENT
KARAIKUDI

Alagappa University, which was awarded 'A plus' grade by the National Assessment and Accreditation Council (NAAC) has become the only and first university in south India to obtain the grade with 3.64 Cumulative Grade Point Average (CGPA) on the four-point scale.

Announcing this at a press conference here on Monday, Vice Chancellor Professor S. Subbiah said among the four State universities which were accredited with 'A plus' grade in the country, Alagappa University was one of the youngest institutions to secure the grade and top the State.

The other three state universities which obtained 'A plus' grade were SavitribaiPhule Pune University of Maharastra, Utkal University of Odisha and University of Jammu of Jammu and Kashmir, with CGPA of 3.60, 3.53 and 3.51 respectively, he said.

The NACC has awarded the grade to Alagappa University in the third cycle of accreditation and declared that the grade would be valid for a period of seven years with effect from May 2, 2017, he said. Instead of five years, the extended validation was given in view of the university's consistency in achieving accreditations in the first and second round assessments in 2005 and 2011, he added.

NAAC had assessed 86 universities and deemed universities and awarded 'A plus' to nine universities, including four state universities, he said. NAAC Peer Team has given the highest point to Alagappa University for its sophisticated science laboratories, experienced and committed faculty, good physical and IT infrastructure, eco-friendly environment and good alumni support, Professor Subbiah said.

The team was also impressed with the university's linkages with local industries, augmented placement services and skill training across several sectors, he added.

"We have exhibited improved performance in all spheres - curricular aspects, teaching-learning and evaluation, research consultancy and extension, infrastructure and learning resources, governance leadership and management and innovations and best practices to stand tall amongst our peers," he said.

Professor V. Balachandran, Registrar (in-charge), M. Selvam, syndicate member and H. Gurumallesh Prabu, controller of examinations, were present.

தினமணி - 16.05.2017

# தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகம் முதலிடம்: துணைவேந்தர்

காரைக்குடி, மே 15: தரநிர்ணயத்தில் 3.64 புள்ளிகளுடன் 'ஏ பிளஸ்' தகுதிபெற்று இந்திய அளவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் முதலிடம் வகிக்கிறது என்று துணைவேந்தர் சொ. சுப்பையா தெரிவித்தார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: 2016 ஜூலை முதல் 17 ஏப்ரல் வரை ஆய்வு செய்து தரநிர்ணயம் செய்யப்பட்ட 86 இந்தியப் பல்கலைக்கழகங்களில் 9 பல்கலைக்கழகங்கள் 'ஏ பிளஸ்' தகுதியை பெற்றுள்ளன. இவற்றில் 4 பல்கலைக்கழகங்கள் மாநிலப் பல்கலைக்கழகங்களாகும். இதர 5 நிகர்நிலை பல்கலைக்கழகங்களாகும். மாநில பல்கலைக் கழகங்கள் நான்கில் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் அதிகபட்சமாக 4 க்கு 3.64 புள்ளிகளைப் பெற்று இந்திய அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. அழகப்பா பல்கலைக்கழகம் மட்டுமே தமிழக அளவிலும், தென்னிந்திய அளவிலும் முதல்முறையாக ஏ பிளஸ் தகுதி பெற்றுள்ளது.

நமக்கு அடுத்த இடங்களில் மகாராஷ்ட்ரா சாவித்திரி பாய் பூலே புணே பல்கலைக் கழகம், ஒடிஸா உத்கல் பல்கலைக்கழகம், ஜம்மு பல்கலைக்கழகம் முறையே 3.60, 3.53, 3.51 புள்ளிகளைப் பெற்றுள்ளன.

இங்கு, மேம்பட்ட மற்றும் நுட்பமான அறிவியல் சோதனைக் கூடங்கள், அனுபவமும் அர்ப்பணிப்பும் மிக்க ஆசிரியர்கள், சிறந்த கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்புகள், இயற்கையோடு இணைந்த சுற்றுச்சூழல், முன்னாள் மாணவர்களின் சிறப்பான ஆதரவு உள்ளிட்ட ஐந்து சிறப்புத் திறன்களை தேசிய தரநிர்ணய மதிப்பீட்டுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது என்றார்.

பேட்டியின் போது பதிவாளர் வி. பாலச்சந்திரன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், உள்தர மதிப்பீட்டு மைய ஒருங்கிணைப்பாளர் எம். செல்வம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு தேசிய தரநிர்ணயக்குழு அளித்த 'ஏ பிளஸ்' தகுதிக்கான கடிதத்தை திங்கள்கிழமை வெளியிட்ட துணைவேந்தர் சொ. சுப்பையா.

தினமணி - 16.05.2017

# தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகம் முதலிடம்: துணைவேந்தர்

காரைக்குடி, மே 15: தரநிர்ணயத்தில் 3.64 புள்ளிகளுடன் 'ஏ பிளஸ்' தகுதிபெற்று இந்திய அளவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் முதலிடம் வகிக்கிறது என்று துணைவேந்தர் சொ. ப்பையா தெரிவித்தார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: 2016 ஜூலை முதல் 17 ஏப்ரல் வரை ஆய்வு செய்து தரநிர்ணயம் செய்யப்பட்ட 86 இந்தியப் பல்கலைக்கழகங்களில் 9 பல்கலைக்கழகங்கள் 'ஏ பிளஸ்' தகுதியை பெற்றுள்ளன. இவற்றில் 4 பல்கலைக்கழகங்கள் மாநிலப் பல்கலைக்கழகங்களாகும். இதர 5 நிகர்நிலை பல்கலைக்கழகங்களாகும். மாநில பல்கலைக்கழகங்கள் நான்கில் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் அதிகபட்சமாக 4 க்கு 3.64 புள்ளிகளைப் பெற்று இந்திய அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. அழகப்பா பல்கலைக்கழகம் மட்டுமே தமிழக அளவிலும், தென்னிந்திய அளவிலும் முதல்முறையாக ஏ பிளஸ் தகுதி பெற்றுள்ளது.

நமக்கு அடுத்த இடங்களில் மகாராஷ்ட்ரா சாவித்திரி பாய் பூலே புணே பல்கலைக் கழகம், ஒடிஸா உத்கல் பல்கலைக்கழகம், ஜம்மு பல்கலைக்கழகம் முறையே 3.60, 3.53, 3.51 புள்ளிகளைப் பெற்றுள்ளன.

இங்கு, மேம்பட்ட மற்றும் நுட்பமான அறிவியல் சோதனைக் கூடங்கள், அனுபவமும் அர்ப்பணிப்பும் மிக்க ஆசிரியர்கள், சிறந்த கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்புகள், இயற்கையோடு இணைந்த சுற்றுச்சூழல், முன்னாள் மாணவர்களின் சிறப்பான ஆதரவு உள்ளிட்ட ஐந்து சிறப்புத் திறன்களை தேசிய தரநிர்ணய மதிப்பீட்டுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது என்றார்.

பேட்டியின் போது பதிவாளர் வி. பாலசந்திரன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், உள்தர மதிப்பீட்டு மைய ஒருங்கிணைப்பாளர் எம். செல்வம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு தேசிய தரநிர்ணயக்குழு அளித்த 'ஏ பிளஸ்' தகுதிக்கான கடிதத்தை திங்கள்கிழமை வெளியிட்ட துணைவேந்தர் சொ. சுப்பையா.

NB

THE HINDU - 16-05-2017

# NAAC awards 'A plus' grade to Alagappa University

## The accreditation will be valid for a period of seven year, says V-C

SPECIAL CORRESPONDENT
KARAIKUDI

Alagappa University, which was awarded 'A plus' grade by the National Assessment and Accreditation Council (NAAC) has become the only and first university in south India to obtain the grade with 3.64 Cumulative Grade Point Average (CGPA) on the four-point scale.

Announcing this at a press conference here on Monday, Vice Chancellor Professor S. Subbiah said among the four State universities which were accredited with 'A plus' grade in the country, Alagappa University was one of the youngest institutions to secure the grade and top the State.

The other three state universities which obtained 'A plus' grade were SavitribaiPhule Pune University of Maharastra, Utkal University of Odisha and University of Jammu of Jammu and Kashmir, with CGPA of 3.60, 3.53 and 3.51 respectively, he said.

The NACC has awarded the grade to Alagappa University in the third cycle of accreditation and declared that the grade would be valid for a period of seven years with effect from May 2, 2017, he said. Instead of five years, the extended validation was given in view of the university's consistency in achieving accreditations in the first and second round assessments in 2005 and 2011, he added.

NAAC had assessed 86 universities and deemed universities and awarded 'A plus' to nine universities, including four state universities, he said. NAAC Peer Team has given the highest point to Alagappa University for its sophisticated science laboratories, experienced and committed faculty, good physical and IT infrastructure, eco-friendly environment and good alumni support, Professor Subbiah said.

The team was also impressed with the university's linkages with local industries, augmented placement services and skill training across several sectors, he added.

"We have exhibited improved performance in all spheres - curricular aspects, teaching-learning and evaluation, research consultancy and extension, infrastructure and learning resources, governance leadership and management and innovations and best practices to stand tall amongst our peers," he said.

Professor V. Balachandran, Registrar (in-charge), M. Selvam, syndicate member and H. Gurumallesh Prabu, controller of examinations, were present.

தினகரன் 17.05.2017

ஏ பிளஸ் தகுதி பெற்று

# அழகப்பா பல்கலைக்கழகம் இந்திய அளவில் முதலிடம்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட ஏ பிளஸ் சான்றிதழை துணைவேந்தர் சுப்பையா வெளியிட்டார். உடன் பதிவாளர் பாலச்சந்திரன் உள்பட பலர் உள்ளனர்.

## துணைவேந்தர் தகவல்


**காரைக்குடி, மே 17:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் அகில இந்திய அளவில் ஏ பிளஸ் தகுதி பெற்ற பல்கலைக்கழகங்களில் அதிக மதிப்பெண் பெற்று முதலிடத்தில் உள்ளது என துணைவேந்தர் சுப்பையா தெரிவித்தார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு தேசிய தர நிர்ணயக்குழுவால் வழங்கப்பட்ட ஏ பிளஸ் சான்றுக்கான கடிதத்தை அவர் வெளியிட்டார்.

அதன் பின் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில்," காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம தேசிய தர நிர்ணயக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு ஏ பிளஸ் கிரேடு அந்தஸ்தை ஏழு ஆண்டுகளுக்கு பெற்றுள்ளது. கடந்த ஜூலை மாதம் 2016 முதல் ஏப்ரல் 2017 வரை இந்தியாவில் உள்ள 86 பல்கலைக்கழங்களில் தர நிர்ணயம் செய்யப்பட்டதில் 9 பல்கலைக்கழகங்கள் ஏ பிளஸ் கிரேடு தகுதி பெற்றுள்ளன. இதில் 4 மாநில பல்கலைக் கழகங்கள், 5 நிகர்நிலை பல்கலைக்கழகங்கள். 4 மாநில பல்கலைக்கழகங்களில் இப் பல்கலைக்கழகம் 4 புள்ளிகளுக்கு 3.64 பெற்று இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளது.

தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் இப் பல்கலைக்கழகம் மட்டுமே முதல் முறையாக ஏ பிளஸ் கிரேடு தகுதியை பெற்றுள்ளது. அகில இந்திய அளவில் ஏ பிளஸ் தகுதி பெற்ற மகாராஷ்ட்ரா, ஒடிசா, ஜம்மு பல்கலைக்கழகங்களை விட அதிக மதிப்பெண் பெற்று அகில இந்திய அளவில் முதலிடத்தில் உள்ளது" என்று தெரிவித்தார். பதிவாளர் பாலச்சந்திரன் உள்பட பலர் உடன் இருந்தனர்.

தினத்தந்தி
19.5.17



தேசிய தர நிர்ணய குழுவால் வழங்கப்பட்ட 'ஏ பிளஸ்' கிரேடு தகுதி கடிதத்தை துணை வேந்தர் சுப்பையா காண்பித்தபோது எடுத்தபடம்.

### தேசிய தரநிர்ணயத்தில் 'ஏ பிளஸ்' கிரேடு தகுதி பெற்று

# இந்திய அளவில் அழகப்பா பல்கலைக்கழகம் முதலிடம் வகிக்கிறது

## துணைவேந்தர் சுப்பையா பேட்டி

காரைக்குடி, மே.19-

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் தேசிய தர நிர்ணயத்தில் 'ஏ பிளஸ்' கிரேடு தகுதி பெற்று இந்திய அளவில் முதலிடம் வகிக்கிறது என்று துணை வேந்தர் சுப்பையா தெரிவித்தார்.

### பேட்டி

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக நிர்வாக அலுவலகத்தில் செய்தியாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது நிருபர்களிடம் துணை வேந்தர் சுப்பையா கூறியதாவது:-

அழகப்பா பல்கலைக்கழகம் தேசிய தரநிர்ணய குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டு 'ஏ பிளஸ்' கிரேடு தகுதியை மேலும் 7 ஆண்டுகளுக்கு பெற்றுள்ளது. கடந்த 2-ந்தேதி நடைபெற்ற நிலைக்குழு கூட்டத்தில் 3-வது சுழற்சியில் இந்த தகுதி வழங்கப்பட்ட விவரம் தெரிவிக்கப்பட்டது. மேலும் தேசிய தர நிர்ணயக் குழு அலுவலகத்திலிருந்து கடிதமும் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் 2017-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை தர நிர்ணயம் செய்யப்பட்ட 86 இந்திய பல்கலைக்கழகங்களுள் 9 பல்கலைக்கழகங்கள் 'ஏ பிளஸ்' கிரேடு தகுதியை பெற்றுள்ளன. இவற்றில் 4 பல்கலைக்கழகங்கள் மாநில பல்கலைக்கழகங்களாகும். இதர 5 நிகர்நிலை பல்கலைக்கழகங்கள். மாநில பல்கலைக்கழகங்கள் 4-ல் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் அதிகபட்சமாக 4 புள்ளிகளுக்கு 3.64 புள்ளிகளை பெற்று இந்திய அளவில் முதலிடத்தை பெற்றுள்ளது.

### நிலையான வளர்ச்சி

மாநில பல்கலைக்கழகங்களில் இளைய பல்கலைக்கழகம் அழகப்பா பல்கலைக்கழகம் மட்டுமே முதல் முறையாக 'ஏ பிளஸ்' கிரேடு தகுதியை தமிழக அளவிலும், தென்னிந்திய அளவிலும் பெற்றுள்ளது. அகில இந்திய அளவில் 'ஏ பிளஸ்' கிரேடு தகுதியை பெற்ற மாநில பல்கலைக்கழகங்களில் மற்ற 3-ல் பழமையான மகாராஷ்டிரா சாவித்திரி பாய் பூலே புனே பல்கலைக்கழகம், ஒடிசா உத்கல் பல்கலைக்கழகம், காஷ்மீரில் உள்ள ஜம்மு பல்கலைக்கழகம் முறையே 3.60, 3.53, 3.51 புள்ளிகளை பெற்றுள்ளன. அழகப்பா பல்கலைக்கழகம் [illegible] லும் நிலையான வளர்ச்சி கண்டுள்ளது.

### சிறப்பு திறன்கள்

பல்கலைக்கழகத்தின் ஒட்டு மொத்த திறன்களுள் மேம்பட்ட மற்றும் நுட்பமான அறிவியல் சோதனைக்கூடங்கள், அனுபவமும், அர்ப்பணிப்பும் மிக்க ஆசிரியர்கள், சிறந்த கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்புகள், இயற்கையோடு இணைந்த சுற்றுச்சூழல், முன்னாள் மாணவர்களின் சிறப்பான ஆதரவு உள்ளிட்ட 5 சிறப்பு திறன்களை தேசிய தர நிர்ணய மதிப்பீட்டுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது பல்கலைக்கழக பதிவாளர் பாலச்சந்திரன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், உள்தர மதிப்பீட்டு மைய ஒருங்கிணைப்பாளர் செல்வம் உள்ளிட்டோர் இருந்தனர்.